www.padippakam.com



# அஸ்தி சங்கமம்

24-2-2004, செவ்வாய்கிழமை





## சிவசுந்தரம் சிவநாதன் (சிவா)

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அஸ்தி சங்காரம்

நாள் : **24-2-2004**, செவ்வாய்க்கிழமை



# சிவசுந்தரம் சிவநாதன்

## (சிவா)

## டென்மார்க்

சிந்தும் ...

கண்ணீர்த் துளிகள்

[redacted] + [redacted]



படிப்பகம்

www.padippakam.com

டென்மார்க்
13-2-2004

# யார் ???? சிவநாதன்

**1985**-ம் ஆண்டு தை மாதம் அதிகாலை சூரியோதயத்திற்குமுன் யாழ் வடமராச்சிப் பகுதி கடற்கரை அமைதியான சூழ்நிலை நிசப்தம்.

மிக மிக வேகமாக வந்து கொண்டிருந்த அப்படகு விரும்புமடியாரைக் காக்கும் தெய்வமான முருகப்பிரான் தீர்த்தக் கரையின் பக்கத்தே ஓடி மறைந்தது. அச்சமயம் அவ்விடம் சுற்றி வந்த பகைவனான மற்றுமொரு கப்பல் மறைந்த கப்பலைத் தேடிச் சங்கநாதம் செய்தது.

அந்த நேரம் இன்னொரு விசைப்படகு பெரிய கப்பலிலிருந்து இறக்கப்பட்டது. இப்படகு முன்பு முன்னே ஓடி மறைந்த திசையை நோக்கி அதிவேகமாகச் சென்றது. கரையிலிருந்த காளைகள் சிலர் தற்பொழுது தம்மை நோக்கி வந்த விசைப்படகில் சிறு பீரங்கிகள் தம்மை குறிபார்த்த வண்ணம் மேலே கிளம்புவதைக் கண்டனர்.

கரையிலிருந்த காளைகளிற் சிலர் துணிச்சலோடு தமது உயிரைத் துச்சமென மதியாது துப்பாக்கிக் கொண்டு எதிர்த்தனர். எதிரிகளிற் சிலர் துப்பாக்கி குண்டுக்கு பலியானார்கள். இன்று உலகம் முழுவதுமே தமிழன்னைக்கு கொடி கட்டிப் பறக்கிற காலமாயிருக்கலாம். ஆனால் பொலிகண்டியிற் காட்டிய, தடுத்து நிறுத்திய, எதிரிகளை உயிர்ப்பலி கொண்ட, எதிரிகளை புறமுதுகிடச் செய்த, இந்த எதிர்ப்பே ஆரம்ப



படிப்பகம்

www.padippakam.com

எதிர்ப்பு. இது வாயளவில் அல்ல. செயலளவில் செய்து காட்டிய எதிர்ப்பு. இந்த களத்தில் குதித்த சில காளைகளுக்கும் இச்சமர் நடந்த பொலிகண்டி மண்ணும் என்றென்றும் தமிழ் உலகத்தினால் போற்றப்படக் கூடியவை. எனவே இதில் பங்கு கொண்ட நம் கதாநாயகனை தமிழுலகம் கௌரவிக்கும் என்பது முடிபு.

கந்தவன் நாதர் வீதியில் கோயிற்அச்சகரை சப்பாத்துக் காலால் மிதித்து தாக்கியதும் அவர்கள் குலப் பெண்களை கற்பழித்து கை விரல் மோதிரங்களை கழற்றிச் சென்றதும் போன்ற பல கொடுமைகளை அகற்ற முனைந்தவர் வரிசையில் சிவா.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமானன்னார்
உயிர் நீப்பர் மானம் கெடின்."

என்னும் வாய்மொழிக்ககேற்ப வாழ்ந்தவர்.

இரவு நேரத்தில் இனவாத சக்திகளினால் கைது செய்யபப்பட்டார். கண்களை மூடிக் கவசப்பட்டார்கள். இந்நிலையில் வாகனத்தில் ஏற்றப்பட்டார். ஏன் ? இந்த அநியாயங்களை அக்கிரமங்களை - எதிர்த்து தடுத்து நிறுத்தியதனால்

"கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே" என்னும்

பாரதிதாசன் வாக்கைப் பதறவிடாது வாழ்ந்து தர்மத்தை நிலை நிறுத்தினார். எவர்களோடு சேர்ந்து பாடுபட்டாரோ, அவர்களாலே அவர் உயிர் பாதுகாக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது. அன்னார் டென்மார்கில் குடும்பத்துடன் வாழ்ந்து **25-1-2004** அன்று பரமபதம் எய்தினார். அண்ணாரின் அஸ்தி சங்கமம் **24-2-2004**, **செவ்வாய்கிழமை** அன்று நடைபெற உள்ளது.

"வணக்கம்"

**- Son's of Denmark + Norway**



படிப்பகம்

www.padippakam.com

**வசந்த சேயோன் - லண்டன்**
**(S.V. Vasantha Seyon - London)**
**மைத்துனர் சேயோன் – லண்டன்**

அன்பு மிக்க அத்தான் எங்கள் குடும்பத்தில் சிவா, தாஸ், பவன், ரவி, குமார் - நீங்கள் இருக்கும் வரை மூத்த அத்தான் மட்டுமன்றி; எங்கள் குடும்ப உயர்வுக்கும் உறுதுணையாய் நின்றீர்கள் என்றும்; எதிர்காலத்து முன்னேற்றம் பற்றியே கூறுவீர்கள். இனிமேல் உங்களைப்போல யார் அத்தான் ..... ? யார் மாமா எங்கள் பிள்ளைகளிற்கு ...............

**வதனா விக்கி - டென்மார்க்**
**(வினுஷன் - விதுனா)**

பெரியப்பா என்றாலே ஆனந்தமுடன் இருவரும் மடியில் இருந்தபடியயே காணிக்கும் போவோம். மைனாக்கதை சொல்லியே ஆனந்தப்படும் பிள்ளைகளிற்கு எங்கே பெரியப்பா என்றால் என்ன பதில் சொல்வோம் ...

**சுதா, சுதாகர் (ஜனன், ஜனனி)**

அப்பா தூங்குகிறார், எழுப்ப வேண்டாம் எழும்பி வருவார் என்று எண்ணி இருக்கும் உங்கள் பேரப்பிள்ளைகளிற்கு; காரில் போக ஆவலுடன் இருக்கும் பிள்ளைகளிற்கு எங்கே ? பெரியப்பா ? என்றால் என்ன பதில் சொல்வோம். ...........



*By*

**வசந்த சேயோன்**



படிப்பகம்

www.padippakam.com



# அஸ்தி சங்கமம் – சிவநாதன்
## கண்ணீர்த்துளிகள் ...

### விநாயகர் காப்பு

வேழமுகங் கொண்ட விக்ன விநாயகா
காலனவன் கொண்ட காளை - சிவ
நாதனவன் போன் நற்கவிதை பாடுதற்கு
பாதமலர் பணிந்தேன் வா.

### வேலவன்

1. ஊரைப் பிரிந்து நின்றோம் உற்ற துணை
நம்பி நின்றோம் வேரைப்பறித்து
விண்ணாடு மேற்கொண்டான்
காரைக்கால் மண்ணில் கண்ணீரொடு நாங்கள்
ஆரைப் பிடித்தழுவோம் ஐயகோ வேலவனே.

2. ஆராரோ ஐயகோ ஆறுமுகமானவனே
சீராரும் வன்னிமரம் சிந்தை குடிகொண்டவனே
நேராக மயிலேறி நீள்வானில் வேல்கொண்டு
பாராய் அழகுரலின் பக்கத்தில் நீவருவாய்.

3. சீராரும் கடல் உலகில் சிவநாதா உன்னுருவம்
பேரான எழில் வடியப் பார்க்கவே முடியவில்லை
மார்பிலடிப்பதுபோல் மன்னவா எங்களுக்கு
காலை எழுந்தவுடன் கண்ணாற் சொரியுதையா.

## சாந்தாவும் – பாலர்களும்

4. ஆருண்டு சாந்தா அருகிருக்க தத்தளிப்பாள்
கூர்கொண்ட வேலால் குற்றுயிரை மாய்ப்பதுபோல்
சீர்கொண்ட புறவினங்கள் சிதறிக் கிடப்பதுபோல்
நீர் தந்த பாலர் நெட்டுயிர்த்து விழுகிறாரே.

## பேத்தி – ஜனனி

5. பேத்தி படம் வரையப் பின்பக்கம் சேர்த்தணைத்துச்
சோத்துக்கை நீபிடித்துச், சூப்பாமற் போனதனால்
வேர்த்து விழுகின்றாள் விம்மும் பெருமூச்சு
பார்க்கும் சுதா கண்டு பரிதவிப்பாள் மூச்சுவிட்டு

## ஏன் மறைந்தாய் ?

6. கணனிப் பொறிவல்லோய் காலன் கைப் பொறியானாய்
ஜனனி பொறிபடிக்கச் சாயந்தரம் வருவாயோ ?
வினவி உனைக்கேட்டால் விண்ணவரோ பதிலளிப்பார்
மனைவி மக்களை விட்டு ஏன் ?
மறைந்தாய் நொடிக்குள்ளே.

## வதனா ரஜியா

7. வதனா அழுகின்றாள் வானத்தைப் பார்த்தபடி
ரஜியா அழுகின்றாள் இந்தவழி போனாரோ
ரஞ்சன் கலங்கின்றாள் இனி ஏன் இருப்பது என்று ?
இரஞ்சிதம் அண்ணாவோ என்று உன்னை

## வாகீசு – வினூஸ்

8. சாந்தமலர் உதியும் சாவதுதான் முடிபென்றார்
பாந்தமுள்ள வாகீசு வருவாரோ பெரியப்பா
ஏந்தலே பெரியப்பா அப்பா வினூஸ் அழுவார்
எங்களை விட்டு நீ ஏன் மறைந்தாய் என அழுவார்.

## சிவநாதன் செல்லும் திசை

9. சேயோனும், சிறந்த சிவா முதலாம்
ஈர் ஈஸ்வர குமாரும், சிந்தனையின் அட்சரமாம்
சேர் சரவண பவாவும் சேர்ந்தே புலம்புகின்றார்;
போகும் சிவநாதன் புனித திசை நோக்கி

## இனிய மருமக்கள்

10. உதயராஜ் மீரா மிதுஷா
உதய சங்க ருடனே
அசோக்குமார் செந்தூரன்
ரேகா சேர்ந்த இனிய மருமக்களே
வசந்தி வானதி சத்தி வேலோடு
மருமக்கள் மகனாய் வாழ்ந்து வந்தனரே.

11. சிவசுந்தரனார் சேர்ந்து கடிமணம்
செய்ய, செல்வி சின்னமணியும்
முக்காலம் செய் தவத்தின் பயனாய்,
தக்கதோர் செல்வ சிவனாதன் தோன்றினர்
தாவறு முலகில் வாழ்வது மேவுநாளில்
காரிகை கன்னிகை சாந்தகுல
ராணியைக் கடிமணம் செய்து
களிப்புடன் இருந்தனர்.
காலம் செல்ல ஓர் உதயகுமாரை
களிப்புறப் பெற்று கவலை தீர்ந்தனர்.
சிலவேளைப் பொழுதினில் விழுமிய
பண்பன் வித்தகாதித்தனும்
சாலச் சிறந்த சுதர்சினியாளும்
சேர்ந்தமூவர் பாந்தமுடனே
செய்தவம் கிடைத்து சிறப்புற்றனரே.

12. ஹலண்டில் உதய
குமாரை ரோஸ்மின்
கன்னி யை மணந்தார்.
கண்மணி அனுஷா
குழந்தை யைக் கண்டார்.

www.padippakam.com

13. கன்னியாம் சுதர்சினி
சுதர்சனை மணந்து
ஜனனி ஜனன் இரு
மகவைப் பெற்றார்

14. சொன்னது போற்றும் அன்னரத்னமும்
சொல்லில் இனிய புனிதா தானாம்
நல்லதை நாடும் நவில் சத்யாவும்

15. அல்லதை அகற்றும் அருள் ரஞ்சிதாவும்
அன்புருவன நன்பெரு மாலாவும்
நன்மைத் துனர்கள் சோதரம் ஆவார்

16. முத்து மாணிக்கத் தொடு
மூத்த சகோதரர் தங்கேஸ் ஆவர்
முருகேசு சார்ந்த மூதறி தயாபரன்
வடிவேலு உடனே வண் புத்திரர்களும்
ஜெயகாந்து வாழ் ஜெயலட்சுமியும்
குயிலம்மா வுடன் சுரேஸ் முதலாயோர்
சூழ இருந்த நீழல் மரங்கள்
சின்னத்துரை சிறந்த ஆனந்தம்
சீர்பெறு வரிசையில் சித்தி வியாகம்
பேர்பேறு வன்னி வடிவோலொடு
தெய்வ சிகாமணி சேரும்
ஏரம்பமூர்த்தி இயக்கு சீதாவும்
நடனியொடு சந்திரர் கதிரமலையொடு
நல்தங்க மணி சேர் தங்க பூரணம்
நவில் சோதிப்பிள்ளை நற்கயிலாய
வதியும் இன்னும் சேர்ந்த
உறவினராக கொடிக்கீழ் வாழ்ந்தனர்
மல்லிகா அம்மன் மற்ற
பஞ்சாட்சரத்தொடு வேலுச்சாமி
அழகம்மா வுடனொரு ஈஸ்வரி
ஈஸ்வரி பிரபா இவர்களும் சேர்ந்தே
சுதன் என்றொரு சூர்யகுமாரன்
மாணிக்கத் தொடு தளைய சிங்கம் நாகேஸ்
மகிழ்வுறு புத்திரர் கூட வாழ்ந்தனர்



படிப்பகம்

பாலேந்திரனொடு பாலேஸ்
வேலும்மயிலொடு வெற்றி சிகாமணி
மகேஸ்வரியம்மா மகிழ் கிளி உமாவும்
இன்னும் எத்தனை வரிசையிலுள்ளோர்
இங்கு வராதவர் எல்லோரும் சேர்க
குற்றம் விலக்கி குணமது கொள்க.
செல்லத்தம்பியொடு சேர் அமிர்தம்மே

17. ரவீந்திரன் சுரேந்திரன்
கோவிந்தராஜ் குணமுடை மைத்துனர்
கரிகாலன் செந்தூரன்
கீர்த்திகா பிரியதர்சினியும்

18. **சிவநாதா வா ! வா !! வா !!!**

| | |
|---|---|
| காருண்ய சீலரே | வா ! வா !! |
| காத்திடவே யெம்மை | வா ! வா !! |
| இடுக்கண் களையவே | வா ! வா !! |
| உடுக்கை இழந்த நேரம் | வா ! வா !! |
| நெருநல் உளனொருவன் | வா ! வா !! |
| இன்று இல்லை என்னாது | வா ! வா !! |
| மாதா பிதா மகிழ | வா ! வா !! |
| மற்று முள்ளோர் அக மகிழ | வா ! வா !! |
| இறவாத சுகமளிக்க | வா ! வா !! |
| இன்பமதை தந்திடவே | வா ! வா !! |
| இறைவனுடன் கூடியே | வா ! வா !! |
| ஈஸ்வரி மகிழ்ந்திடவே | வா ! வா !! |

**அத்தான் ! அத்தான் !!**

| | | | |
|---|---|---|---|
| வாரீரோ ? | அத்தான் | வன்னமயில் | வாகருடன் |
| தாரீரோ | அத்தான் | தளராத | சிந்தைதனை |
| பாரீரோ | அத்தான் | பக்கபலம் | காண்பதற்கு |
| கேளீரோ | அத்தான் | கெடுதலில்லா | செய்திகளை |

**- S.E. குமார் -**

## வழித்தோன்றல்கள் -

சிவசு

சிவநாதன் - சாந்தகுலராணி

உதயகுமார் - ரோஷினி

அனுயா

சுதர்சினி - சுதர்சன்

1. ஜனனி
2. ஜனன்

ஆதித்

வல

சிவசாமி - ம

1. சாந்தகுலராணி - சிவநாத
2. வேலைவேசயோன் - அன்
3. சிவாமகேசன் - புனிதா பி
4. ஈஸ்வரகுமார் - சத்தியா பி
5. சிவரஞ்சனி பிள்ளைகள்
6. மயூரதாஸ் - நிரஞ்சிதா பி
7. குகவதனா - விக்கினேஸ்
8. குகரஜனி - வரதராஜா பி
9. சரவணபவன் - ரத்னமா

## ரலாறு (இயன்ற வரை)

ம் – சின்னமணி
டும்பம்

உதயமலர் – கோவிந்தராஜா

1. உதயராஜ்
2. மீரா
3. ரேகா
4. உதயசங்கர்
5. மிதுஷா

செல்வகுமார்
(காலமானவர்)

உதயகுமார்
(காலமானவர்)

மலர் – ரவீந்திரன்

ஜெஸ்வர்ணன்
ரிகாலன்
ரியதர்ஷினி

சாந்தமலர் – சுரேந்திரன்

1. அசோக்குமார்
2. செந்தூரன்
3. கீர்த்திகா

வரி குடும்பம்

பிள்ளைகள்
த்தினம் பிள்ளைகள்
ளைகள்
ளைகள்

ளைகள்
ன் பிள்ளைகள்
ளைகள்

# திருப்புகழ்

## விநாயகர் துதி

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்

மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

-2-

இயலிசையி லுசிய வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே
மயில் தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

-3-

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷத்தொடு ரக்ஷித் தருள்வது மொருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

-4-

தந்த பசிதனைய றிந்து முலையமுது
தந்து முதுகுதட வியதாயார்
தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகருயி ரெனவேசார்

மைந்தர் மனைவியர்க டும்பு கடனுதவு
மந்த வரிசைமொழி பகர்கேடா
வந்து தலைநவிர விழ்ந்து தரைபுகம
யங்க வொருமகிட மிசையேறி

அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
லஞ்ச லெனவலிய மயில்மேல்நீ
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னெனமொழிய வருவாயே
சிந்தை மகிழமலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு மயில்வீரா
திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
செந்தி னகரிலுறை பெருமாளே.

-5-

**தொ**ந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி
தொண்டு கிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி
வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுக துயர்மேவி
மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்குபொழுதுகடிதே மயிலின் மிசை வரவேணும்
எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம
இங்கு வருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்
சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா
திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் பொருமாளே.

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்

ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதேம நோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா

ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள்
பெருமாளே.

www.padippakam.com



ஆலால முண்டோன் மகனாகி வந்து
அடியாரைக் காத்த குமரா!
பாலோடு பழமும் வயலூரில் தந்து
பணிவான தொண்டு செய்தோம்
வேலோடு மயிலில் விளையாடி வந்து
வினை தீர்த்த பெருமை உனதே
நாலாறு காதம் நடந்தாலும் நின்னை
நம்பி வந்தோம் சரணம் நாங்கள்

- V. சிவசாமி



படிப்பகம்

www.padippakam.com



கொத்தான பூக்கள் வயலூரில்
பூக்க குமரேசனாகி வந்தாய்
சித்தான முனிவர் சிந்தை மகிழ
செவ்வேல் தனைக்கொண்டு வருவாய்
குத்தான பகைவர் குடனைக் கிழித்து
கொடியர் தமைய கொன்று நீயும்
சத்தான வள்ளிமயிலோடு வருவாய்
சண்முகா இங்கு நீயும்.

- V. சிவசாமி





படிப்பகம்

www.padippakam.com

## கீதாசாரம்



இங்கே எதைக் கொண்டு வந்தாய் ?
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ படைத்தாய் ?

## தேவாரம்

தந்தை யார் ? தாய் யார் ?
உடன் பிறந்தார் + ஆர் சுற்றத்தார் + ஆர்
புத்திரர் + ஆர் ? தாம் தாம் ஆரோ
வந்தவாறு எங்ஙனே ? போமாறே
மாயமாம்
இதற்கேது மகிழ வேண்டாம்
சிந்தையீர் !
உமக்கொன்று சொல்லக் கேண்மின்
எந்தையார் திருநாம நமச்சிவாய
என்று
அழுவோர்க்கு இருவிசும்பிருக்கலாமே

தொகுப்பு : **சிவா**

---

*வெளியீடு :*

[redacted]

❖

*மேற்பார்வை, ஆக்கம், தொகுப்பு :*

திரு. **வ. சிவசாமி**,
ஓய்வு பெற்ற ஆசிரியர், டென்மார்க்.

சிவா பேப்பர்ஸ் & கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், 37, அல்லிமால் தெரு, திருச்சி - 8. Ph : 2716226.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



Published by :

[redacted]

C/o. V. SIVASAMY,
VESTER BRO GADE, HOLSTEBRO 7500
DENMARK. Ph : 97401384

Siva Papers & Computer Printers, 37, Allimal Street, Trichy - 8. Ph : 2716226.

படிப்பகம்